# அரசாங்க அறிவித்தல்கள்

1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்

14 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர், பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரின் உடன்பாட்டுடன், 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆந் திகதிய 2047/2 ஆம் இலக்க, *அதிவிசேட வர்த்தமானி* அறிவித்தலில் வெளியிடப்பட்ட இதனகத்துக்குப் பின்னர் வந்துள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பொருட்கள் மீதும் அதே அட்டவணையில் அவற்றிற்கு நேரொத்த பதிவுக்களில் நிரல் (IV) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள செஸ் வரி விகிதமானது 2020 யனவரி மாதம் 14 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் இரத்துச்செய்யப்படுகிறது என இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.

பிரசன்ன ரணதுங்க
கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர்

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
கொழும்பு – 01
2020 யனவரி, 13.

**அட்டவணை**

| இ.மு தலைப்பு I | இ.மு குறியீடு II | | விபரம் III | வரி விகிதம் IV |
|---|---|---|---|---|
| 11.01 | 1101.00 | | கோதுமை அல்லது மெஸ்லின் மா | |
| | 1101.00.10 | --- | கோதுமையினால் | கி.கிராமிற்கு ரூ.15.00 |